[1984 மார்ச் 21

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, திருச்சி வர இருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை தற்போது தள்ளி வைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொனனார்கள். தொழிலாளர் நலன் கருதியும், அங்கேயுள்ள தாய்மார்களின் நலன் கருதியும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நாட்டின் நலன் கருதுகின்றபோது அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருச்சியில் இருப்பதுதான் நியாயம் என்று நாட்டு மக்களால் உணரப்படுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே நாட்டின் நலனிலே அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னையில் பணியாற்றுவதால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. திருச்சியிலே இருந்தாலும், இங்கேயிருந்தாலும் அது பொது மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டுதான் இருக்கும். இங்கே இருப்பதை விட திருச்சியில் இருந்தால், தமிழகத்தின் மையப் பகுதியாக திருச்சி இருக்கிறது என்பதால், நிர்வாக வசதி கூடுதலாக இருக்கும் என்பதால் திருச்சிக்கு மாற்றவேண்டும் என்று பரிசீலித்தோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் அது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அதை அன்றைக்கே செய்து இருப்போம். தொழிலாளர்களின் நலனைப் பொறுத்து நிர்வாகம் சற்று சிரமத்தை எடுத்துக் கொண்டாலும், நாம் இந்த நிலையை எடுக்கவேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தமைக்கும் திட்டம்.

310—(*வினா எண் 22346) திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, திருச்சியைத் தலைமையாகக் கொண்டு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகம் மிகப் பெரிய போக்குவரத்துக் கழகம். காரணம், திருச்சி, தஞ்சை ஆகிய இரண்டு பெரிய மாவட்டங்களிலும் அது ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த இரண்டு பெரிய மாவட்டங்களுக்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் இருப்பதோடு மட்டுமல்லாமல், தஞ்சையின் கிழக்குப் பகுதியான கும்பகோணத்தில் அதன் தலைமை அலுவலகம் இருப்பதால், சில சிரமங்கள் இருக்கின்றன. என்னைப் போன்று திருச்சியின் மேற்குக் கடைகோடி பகுதியில் இருப்பவர்களுக்கு சரியான முறையில் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்ததைப் போல, அதை இரண்டாகப் பிரிப்பதற்கு உடனடியாக முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவரவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்ற திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிதிநிலை அறிக்கையில் கூட சொல்லப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அடிக்கடி இந்த உறுதிமொழியைக் கொடுத்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழி செயல்வடிவத்திற்கு இன்னும் வரவில்லை. அந்த உறுதிமொழி எப்போது செயல்படும் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அவர்கள் இப்படிப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்கவேண்டும் என்பதற்காகத்தான் காத்துக்கொண்டிருந்தோம். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்றால், அடுத்த நிதிநிலை அறிக்கை என்று போகாமல் அதற்கு முன்னாலேயே செய்யப்படும்.